# பெருந்தகை திருமிகு
# கி.வெற்றிவேலு

மெத்தவொரு பெருமை கொண்டு,
மேதினியில் ஐயா பெருமகனார்,
தத்துவம்சேர் திரு **வெற்றிவேல்** அவர்கட்கு,
தனிப் பெரும் விழாதனை காண்பரோ!
நித்திலமாய் பெருமை கொள்ளும்
நெறியோடு கோவை மண்ணில்,
வித்தகராம் **குறிஞ்சிமலர் நண்பர்கள்**,
வெளிப்படுத்துமோர் அன்பின் விழா!

விண்ணகமும் வியப்பூட்ட மேதினியில்,
விருப்பத்தால் நிகழ்த்தும் தனிவிழா!
கண்ணிமையாய் சுயமரியாதை தன்னில்,
கருத்தூன்றி வாழ்ந்தப் பெருமகனை,
மண்ணகத்தில் மாற்றுக் கருத்தின்றி,
மகிழ்வுடனே அரசியலார் காணும்,
திண்ணமிகு விழாவில் நாமும்,
திரண்டு மகிழ்வுடன் வாழ்த்துவோமே!

- அன்புடன்,

**கவிவளவன்** ஆகிய கு.ப.அசோகன்
16-09-2022